# எழுத்து—பேச்சு உரிமையை பறிக்க!

REGD. No. M. 6311 PHONE No. 55630

# நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

The "Nam Nadu": A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

| | | |
|---|---|---|
| தனி இதழ்: ஒரு அணு<br>இலங்கையில் 10 சதம் | சென்னை: ஆடி மீ 5உ செவ்வாய் (20—7—54)<br>வெளியூர்: ஆடி மீ 6உ புதன் (21—7—54) | மலர்: 2<br>இதழ்: 31 |


# காமராசர் வெற்றி — ஆச்சாரியார் தோல்வி!

—(:)—

## குடியாத்தம் வாக்காளர் கருத்து

## ஆச்சாரியார் 'மௌனம்' கண்டு அருவருப்பு

## காங்கிரஸ் மேலிடத்தில் காமராசர் மீது புகார்

## அவதிப்பட்டோர் அணிவகுப்பு திரண்டு நிற்கிறது!

### காமராசருக்கு ஆதரவு பெருகுவதன் காரணம்

குடியாத்தம் தொகுதியில் நடைபெற இருக்கும் தேர்தல் அரசியல் வட்டாரத்திலே மட்டுமின்றி, பொதுமக்கள் அனைவரிடமுமே பெருத்த பரபரப்பை உண்டாக்கிவிட்டிருக்கிறது.

ஆதரவு அமோகமாக இருப்பது தெரிந்தும் காமராசர் பட்டிதொட்டிகளிலும் சென்று, வாக்காளர்களைச் சந்திப்பதும் அவருடைய வெற்றிக்காகப் பல்வேறு கட்சியினரும் பாடுபடுவதும் இந்தத் தேர்தலை ஒரு முக்கியமான பலப் பரீட்சை என்ற வகையான பிரச்னையாக்கி விட்டிருக்கிறது.

காங்கிரஸ்காரரை விட, காங்கிரசல்லாதார்களிடமே, அதிகமான பரபரப்பும், ஆர்வமும் இங்கு காணப்படுகிறது.

*மேற்படி தொகுதியில் கண்டறிந்த நிலைமை இங்கு விளக்கப்பட்டிருக்கிறது.*

குடியாத்தம் தொகுதியில் தேர்தலுக்கு நிற்கும் காமராஜருக்கு ஆதரவு பெருகுவது கண்டு, காங்கிரசிலே ஒரு கோஷ்டியினருக்குக் கிலியும் கசப்பும் அதிகமாகிவிட்டிருக்கிறது.

இந்தக் 'கோஷ்டி' கம்யூனிஸ்டு கட்சியுடன் வெளிப்படையாகக் குலவினால் ஆபத்து என்பதைத் தெரிந்து கொண்டு, மறைமுகமாக எவ்வளவு 'தொண்டு' செய்ய முடியுமோ அவ்வளவும் செய்து வருகிறது.

பெரியார் ராமசாமி வெளிப்படையாகவே காமராஜரை ஆதரிப்பதை சாக்காக வைத்துக்கொண்டு, இந்தக் 'கோஷ்டி' காங்கிரசாரிடம் சாடி சொல்லி, கலாம் விளைவிக்க முயலுகிறது.

என்ன சூழ்ச்சி செய்தாலும் காமராஜர் வெற்றி பெறுவதைத் தடுக்க முடியாது என்பது இந்தக் 'கோஷ்டி'க்கும் புரிந்து விட்டதால், அடுத்தபடியாக, காமராஜர் மீது டில்லி வட்டாரத்தில் கெட்ட பெயர் உண்டாக்க முயற்சி செய்து வருகிறது.

காமராஜரை, திராவிடர் கழகம், திராவிட முன்னேற்றக் கழகம், முஸ்லிம் லீக் ஆகியவைகள் ஆதரிக்கின்றன இக்கட்சிகள் இன வெறியையும் வகுப்புவாதத்தையும் கிளப்பிவிடும் கட்சிகள், இந்த 'ஜாதியில்' காமராஜர் கலந்துவிட்டார், ஆச்சாரியார் செய்துவிட்டுப் போன 'அருமையான' காரியங்களை எல்லாம் ஒவ்வொன்றாகக் கெடுத்துக் கொண்டு வருகிறார், இதனால், காங்கிரசின் 'புனிதம்' கெட்டுக் கொண்டு வருகிறது, 'வகுப்பு வாதம்' தலைவிரித்தாடுகிறது, என்றெல்லாம் புகார் கூறி, காங்கிரஸ் மேலிடத்துக்கு கடிதங்கள் அனுப்பும் 'கைங்கரியம்' மும்முரமாக நடைபெறுகிறதாம்!

'டைம்ஸ் ஆப் இந்தியா' என்ற (வடநாட்டு) இதழின் சென்னை நிருபர், குடியாத்தம் தேர்தலில், காமராசரை திராவிட கழகம், திராவிட முன்னேற்ற கழகம் ஆகியவைகள் ஆதரிக்கின்றன என்று எழுதி, கேலியும் கண்டனமும் செய்திருக்கிறார்.

வன்னியர் சங்கம் போன்ற ஜாதிச் சங்கங்களை திருப்தி செய்து, ஜாதியத்தை காமராஜர் வளர்க்கிறார் என்றும், இந்த சென்னை நிருபர் கண்டித்திருக்கிறார்.

தோழர் எஸ். எஸ். ராமசாமிக்கு மந்திரி வேலை கொடுத்தது ஜாதியத்தை வளர்ப்பதாகும் என்றும் இந்த நிருபர் குறிப்பிட்டிருக்கிறார்.

வன்னியர்களின் சங்கத்தை திருப்திபடுத்தி, பலம்தேடிக் கொள்ள, முன்பு ஆச்சாரியார், மாணிக்கவேலருக்கு மந்திரி வேலை கொடுத்ததை, ரசித்துச் செய்தவர், கண்டிக்காதவர், முன்வராத சென்னை நிருபர் இப்போது காமராசர் மீது கண்டனம் வீச முன்வருவதன் சூட்சமம் எவருக்கும் புரியக் கூடியதுதான். வடநாட்டு பத்திரிகைகளில் இவ்விதமாக எழுதி, வடநாட்டு காங்கிரஸ் வட்டாரத்தில் காமராசருக்குக் கெட்ட பெயர் உண்டாக்கவே இம்முயற்சி செய்யப்படுகிறது.

ஜஸ்டிஸ் கட்சித் தலைவர் பி. டி. ராஜன்கூட காமராஜரை ஆதரிக்கும்படி அறிக்கை கொடுத்திருக்கிறார், தம்மைக் காங்கிரஸ்காரர் என்று கூறிக் கொள்ளும் ஆச்சாரியார், ஏன் இன்னமும் காமராஜரை ஆதரித்து ஒரு வார்த்தையும் பேசவில்லை, என்று காங்கிரஸ் வட்டாரத்திலேயே கேட்கப்படுகிறது.

தன்மீது 'பழி' ஏதும் வராமலிருக்க, ஆச்சாரியார் காமராஜரை ஆதரித்து அறிக்கை வெளியிடுவதுதான் நல்லது, என்று நண்பர்கள் கூறுவது கேட்டு, விரைவில் ஒரு அறிக்கை விடலாம் என்று ஆச்சாரியார் யோசித்திருப்

(4-ம் பக்கம் பார்க்க)

# பண்டிதர் யோசனையை 13 காங்கிரஸ் சர்க்கார்கள் ஒப்பியுள்ளன!

## உயர் நீதி மன்ற அதிகாரத்திற்கும் உலை!

## 7 மாநிலங்கள் இதை விரும்புகின்றன!

### அரசியல் சட்டத்தைத் திருத்த காங். குழு முயற்சி!

இந்திய அரசியல் சட்டத்தில் செய்யப்படவேண்டிய திருத்தங்கள் பற்றி ஆராய்ந்து கூற, பண்டித நேருவின் தலைமையில், ஒரு துணை அமைப்பை உருவாக்கி இருந்தது! அ. இ. காங்கிரஸ் குழு அவ்வமைப்பின் முதல் கூட்டத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிகளை சுற்றறிக்கையாக, எல்லா மாநில சர்க்கார்களுக்கும், காங்கிரஸ் குழுக்களுக்கும், தங்கள் தங்கள் கருத்தைத் தெரிவிக்குமாறு, அ. இ. காங்கிரஸ் அனுப்பிவைத்திருந்தது. அக்கோரிக்கைக் கிணங்க, கூறப்பட்டுள்ள கருத்துக்களை, அத்துணைக்குழு, நுணுகி ஆராய்ந்து, அண்மையில் நடைபெற இருக்கிற அ. இ. காங்கிரஸ் குழுவின் கூட்டத்தில் ஆலோசிக்கப்படும் எனத் தெரியவருகிறது.

இந்திய அரசியல் சட்டத்தில், 'அடிப்படை உரிமைகள்' என்ற பகுதியில் உள்ள, 'எழுத்துரிமை பேச்சுரிமை' வழங்கியுள்ள 19-வது விதியைத் திருத்தி அமைக்குமாறு 13 மாநில காங்கிரஸ் சர்க்கார் ஆலோசனை கூறி இருக்கின்றன.

எழுத்து—பேச்சு உரிமைகளுக்கு மேலும் இருட்டடிக்க வேண்டுமென, காங்கிரஸ் அரசியல் சட்ட ஆலோசனைக் குழுவிடம் கருத்தறிவித்துள்ள மாநிலங்கள் வருமாறு:- ஆஜ்மீர், அஸ்ஸாம், டெல்லி, இமாசலப் பிரதேசம், பஞ்சாப், இராஜஸ்தான், சவுராஷ்டிரம், மேற்கு வங்கம், உத்திர பிரதேசம், ஐதராபாத.

அவதூறு பிரசாரங்களையும், பரபரப்பை உண்டாக்கும் வகையில் கற்பனைச் செய்திகளை வெளியிடும் மஞ்சள் பத்திரிகைகளையும் தடை செய்ய வேண்டுமென காங்கிரஸ் அரசியல் சட்ட ஆலோசனைக் குழு கூறிய ஆலோசனைக்கு, மேற்படி மாநில காங்கிரஸ் சர்க்கார்கள் ஒப்புதல் தந்துள்ளன.

19-வது விதியைத் திருத்தப்பட்டால், காங்கிரஸ் அமைச்சர்களிடமும், பெரிய பெரிய சர்க்கார் அதிகாரிகளிடமும் உண்மையில் காணப்படும் ஒழுக்கீனங்களைக் கூட பொதுமக்கள் நன்மைக்காக, வெளிப்படையாக எடுத்துக் காட்டி, அவர்களைத் திருந்துமாறு செய்வதற்கு, பொறுப்புள்ள செய்தித் தாள்களாலும் இயலாமல் போகும்.

மாநில சர்க்கார்களின் அளவு கடந்த போக்கிற்கு எதிராக, பிறப்பிக்கும் உத்திரவுகளை செயல்பட விடாமல் தடுக்கவும், காவல் கைதிகளை விடுதலை செய்ய கட்டளை பிறப்பிக்கவும், சர்க்காருக்கு வழி காட்டவும், இந்திய அரசியல் சட்ட 226 விதிப்படி உயர்நீதி மன்றங்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள உரிமையை ஒழித்து விடவும், அந்த உரிமைகளை இந்தியத் தலைமை நீதிமன்றத்திற்கு மாற்றவும் தகுந்த வகையில் 226-வது விதியைத் திருத்தி அமைக்கவேண்டுமென, ஆந்திர மாநிலம் உள்பட ஏழு மாநிலங்கள் கோரியுள்ளன.

இந்திய அரசியல் சட்டத்தில் உள்ள சில விதிகளைத் திருத்த வேண்டுமென உத்திர பிரதேசம் யோசனை கூறி இருக்கிறது.

தகுந்த நஷ்டஈடு கொடுத்துத்தான் ஒருவருடைய சொத்துக்களை சர்க்கார் ஏற்றுக்கொள்ள வேண்டும் எனக் குறிப்பிடும் 31-வது விதியை, குறிப்பிட்ட சில இனங்களில் நஷ்டஈடு கொடுக்காமலே சர்க்கார் எடுத்துக்கொள்ள உரிமை இருக்கும் வகையில் திருத்தி அமைக்க வேண்டுமென உத்திர பிரதேசம் கருதுகிறது.

சட்டசபைக் கூட்டம் நிகழ்ந்துகொண்டு இருக்கும் பொழுது, அவசர சட்டம் எதையும் பிறப்பிக்கும் உரிமை ஒரு சர்க்காருக்குக் கிடையாது. அரசியல் சட்டத்தில் உள்ள அதற்கான விதியைத் திருத்தி, சட்டசபைக் கூட்டம் நடந்து கொண்டு இருந்திருக்கும் போதும், அவசர சட்டம் பிறப்பிக்க உரிமையை ஒரு சர்க்காருக்கு வழங்கவேண்டுமென உத்திர பிரதேச சர்க்கார் அபிப்பிராயம் தெரிவித்திருக்கிறது,

ஓய்வு பெற்றுள்ள உயர்நீதி மன்ற நீதிபதிகள் மீண்டும் வழக்கறிஞர் தொழிலை மேற்கொள்ளும் வகையில் 22-வது விதியைத் திருத்தவும், குறிப்பிட்ட மாநிலத்தில் உள்ள யூனியன் சர்க்கார் சொத்துக்கள் மீது வரி விதிக்கும் உரிமை மாநில சர்க்காருக்கு இருக்கும்படி 276-வது விதியில் திருத்தம் செய்யவும்.

ஒரு சர்க்கார் தனது வழியைரை முடிவாக விலக்கி நடவடிக்கை எடுத்துக் கொள்ளும்போது, அதற்கான சமாதானம் கூற வேண்டுமென சர்க்காரை வற்புறுத்தும் உரிமை ஒரு வழியருக்கு இல்லாத மாதிரியில், 311-வது விதியில் மாறுதல் செய்யவும் வேண்டுமென உத்திர பிரதேச சர்க்கார் கோரியுள்ளது.

நம் நாடு
தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 20—7—54 செவ்வாய்

# அவலட்சணம்—உண்மை!

காங்கிரஸ் கட்சி நாடாளும் கட்சியாக இருந்து வருகிறது. மாநிலங்களிலும், மத்தியிலும் காங்கிரஸ் கட்சிதான் அரசோச்சி வருகிறது. திரு—கொச்சி மாநிலத்தில் பெயரளவில் மக்கள் சோஷலிஸ்டு கட்சி ஆட்சி செய்துவருவதற்கும், காங்கிரஸ்பின்னணிபலந்தான் காரணமேயொழிய, வேறு சொந்த பலமல்ல காரணம். எனவே, அங்கும் காங்கிரஸ் கட்சிதான் ஆட்சி புரிந்து வருகிறது எனக் கொள்வதில் தவறு ஒன்றும் கிடையாது.

இந்தியத் துணைக் கண்டம் முழுவதிலும் ஆளும் பேறு பெற்றுள்ள காங்கிரஸ், அந்த பேற்றினை பெறுவதற்கு முன்பும், அதைப் பெற்ற பின்னரும், பொதுவாகப் பொதுமக்களாலும், குறிப்பாகக் காங்கிரஸ் உறுப்பினர்களாலும் எப்படி கொள்ளப்பட்டு வந்தது, எப்படி கொள்ளப்பட்டு வருகிறது என்பதை ஆராய்ந்து பார்க்க வேண்டியது இன்றியமையாததாகும். அவ்வாறு ஆராயவேண்டிய கட்டாயம் பொது மக்களுக்கு இருப்பதைக் காட்டிலும், காங்கிரஸ் உறுப்பினர்களுக்கும் அனுதாபிகளுக்கும், கூடுதலானதாக இருக்கிறது.

இவ்வாறு நாம் கருதுவதற்குக் காரணமே, காங்கிரஸ் கட்சி இன்று வேகமாகப் பெற்றுவரும் சீர்குலைவை, உடனடியாகத் தடுத்து நிறுத்தி, பழுது பார்த்து, மீண்டும் அதை முன்னாள் நிலைக்குக் கொண்டுவர வேண்டுமென காங்கிரஸ் சார்புடையவர் மனமார விரும்புவதினால்தான், அக்கட்சியின் முற்கால—தற்கால நிலையையும் ஒப்புவைத்து நோக்கி, இந்த இரண்டு காலத்திற்கும் இடையில் ஏற்பட்ட சரிவிற்கான காரணங்களையும் நுணுகி ஆராய்ந்து, அதற்குத் தேவைப்படும் தகுந்த மருத்துவ முறைகளை மேற்கொள்ள வேண்டிய கடமையும் பொறுப்பும், மற்றவர்களுக்கு இருப்பதைக் காட்டிலும், காங்கிரஸ் பற்றுடையவர்களுக்குக் கூடுதலாக இருக்கிறது என நாம் வலியுறுத்திக் கூறுகிறோம்.

காங்கிரஸ் கட்சியின் முற்கால நிலையை, நிகழ்கால நிலையுடன் ஒப்பிட்டுப் பார்த்தால் எந்தக் கட்சியைச் சார்ந்தவராக ஒருவர் இருந்த போதிலும், அவர் ஒரே ஒரு முடிவிற்குத்தான் வருவார். அதாவது, அன்றைய காங்கிரஸ், சுயநலம் பேணாத பற்றற்றார் பலரை உறுப்பினராகக் கொண்ட புனிதமானதோர் அரசியல் ஸ்தாபனமாக இருந்தது எனவும், இன்றோ பண வேட்டை, பதவி வேட்டை ஆடும் சுயநல அரசியல் வேடுவர்களின் குகையாக மாறி மாசடைந்து கிடக்கிறது எனவும், சில காங்கிரஸ் கட்சியினரால் குறிப்பிடப்படும் முடிவிற்குத்தான் ஒருவர் வருவார்—வந்து தீருவார்.

இந்த உண்மை அவலட்சணமானதுதான்! கருத்துக்கும் கண்ணுக்கும் எரிச்சல் மூட்டக் கூடியதுதான்! ஒரு நிலை அழகாக இல்லை, மகிழ்ச்சியூட்டுவதாக இல்லை என்பதற்காக, அந்த உண்மை நிலையை மறைக்கப் பார்ப்பதோ, மனப்பூர்வமாக உணர்ந்துகொண்டாலும் பிறர் நகைப்புக்கஞ்சி, வெளிக்குத் தெரியாமல் காக்க வேண்டுமென்பதற்காக, அப்படி ஒரு நிலையே கிடையாது என வழக்காடக் கிளம்புவதோ, காங்கிரஸ் கட்சியில் உண்மை பற்றுடையோர் செய்கின்ற செயலாகவோ இருக்க முடியாது. மழைக்கு ஒதுங்குகிறவர்கள் போல், பரிதியின் வெப்பம் தணிய மர நிழலில் தங்குகிறவர்கள் போல், ஏதோ இலாபவேட்டைக்காகக் காங்கிரசைப் புகலிடமாகக் கொண்டவர்கள் தான், காங்கிரஸ் சரிவுக்கான உண்மையான காரணங்களைக் காண மறுத்தும், சீர்குலைவு ஏற்படவில்லை என பசப்பியும் திரிவர்.

இந்தப் போக்கும், இப்போக்குடையோர் கூட்டுறவும், காங்கிரஸ் கட்சிக்கு ஏற்பட்டுள்ள வேகமான சரிவை, தடுக்க உதவாது;—தடுக்கவில்லை; மாறாக, சரிவை விரைவுபடுத்தக் கண்டிப்பாகத் துணை செய்யும்—துணை செய்திருக்கிறது; என்பதில் ஐயமில்லை!

பிரிட்டிஷ் ஆதிக்கத்தை எதிர்த்துப் போரிட்டு வந்த வரையில், இலாப நஷ்டக் கணக்குப் பார்த்துப் பொது வாழ்வில் புகுந்திருந்தவர்களுக்கு, காங்கிரஸ் கட்சி புகலிடமாக இருக்கவில்லை. அதுகாலை காங்கிரஸ், பெரும்பாலான மக்களின் இருதயத்தை இருப்பிடமாகக் கொண்டு இயங்கி வந்தது. ஆனால் ஆட்சிபீடத்தில் ஏறியதும், மக்கள் இதயத்தைப் பீடமாகக் கொண்டிருந்த காங்கிரஸ், அந்த உயர்ந்த இடத்தை விட்டுப் பெயர்ந்து, மெள்ள மெள்ள நழுவிக் கொண்டே வந்து, மக்கள் நடமாடும் புழுதி மண்ணை அடைந்துவிட்டது.

ஆங்கில ஏகாதிபத்தியத்தை அகற்றும் இன்றியமையாப் பணியை மேற்கொண்டு, தியாகத் தழும்புகளை முகமலர்ச்சியுடன் தாங்கிக் கொள்ளும் நெஞ்சத்துணிவு கொண்டவர்களையும், சேவை உள்ளம் படைத்தவர்களையுமே கொண்டதோர் புனிதமான ஸ்தாபனமாகக் காங்கிரஸ் இருந்தது. அன்று காங்கிரஸ் மேற்கொண்டிருந்த பணி அத்தகையதாக இருந்தது. ஆங்கில ஏகாதிபத்தியம், அகற்றப்பட்டதும், காங்கிரஸ் மேற்கொண்டிருந்த கடமையும் புரட்சிகரமான மாற்றம் பெற்றுவிட்டது! எனவே, காங்கிரஸ் கட்சி மேற்கொண்டிருந்த பணியின் தன்மை மாறிவிடவே, அந்தப் பணியை வெற்றிகரமாக நிறைவேற்ற வேண்டிய ஆட்களின் தன்மையும் தரமும் மாற்ற முற்றுக வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுவிட்டது.

அதாவது, அன்றைய காங்கிரசின் அடிப்படை கோட்பாட்டில் மாற்றம் ஏற்பட்டுவிடவே, அக்கோட்பாட்டில் வெற்றி காண தேவைப்பட்ட ஆட்களுக்கும் அவசியமில்லாமல் போய்விட்டது. புதிய பணி—அதற்குத் தகுந்த புதிய ஆட்கள் தேவைப்படுகிறது!

புதிய பணிக்கேற்ப கிடைக்கும் புதிய ஆட்கள் பணிபுரிவதில் ஆர்வமுடையவர்களாக இருந்த போதிலும், மேற்கொள்ளப்பட்டுள்ள புதியபணியில், உடனுக்குடன் கைமேல் பலன் காணும் பண்பு இருப்பதால், அதைப் பெறுவதில், பணி புரிவதில் அவர்களுக்கு இருக்கும் ஆர்வத்தைக் காட்டிலும், அத்துடன் ஒட்டியுள்ள பரிசு பெறுவதில் அவர்களுக்கு ஆர்வம் மிக்க உள்ளது! அதன் விளைவாக, அவர்களுக்குள் போட்டியிடுவது சர்வ சாதாரணச் சம்பவமாகிவிட்டது. அப்படி ஏற்படும் போட்டியின் எதிரொலியாக, பணி புரியும் வாய்ப்பும், அதன் பலனை அனுபவிக்கும் சந்தர்ப்பமும் கிடைக்கப்பெற்றவர்களுக்கும், அவ்விரண்டும் கிடைக்கப் பெறாது ஏமாற்றம் கண்டவர்களுக்கும், மனக்கசப்பு ஏற்பட்டுவிட்டது. உள்ளுக்குள் ஏற்பட்ட கசப்பு, நாளாக நாளாக முற்றி, 'நீ என்ன? நான் என்ன?' என முச்சந்தியில் வந்து நின்று முடைநாற்றம் வீசும் கீழ்நிலையைப் பெற்றுவருகிறது,

இன்று காங்கிரஸ் இந்த நிலையில்தான் உள்ளது. நிலை அழகாக இல்லை—அவலட்சணமாகத்தான் உள்ளது! ஆனால் உண்மை!

அன்று பெருங்காயத்தைக் கொண்டிருந்த பாத்திரமாகக், காங்கிரஸ் இருந்தது! இன்று, பெருங்காயம் பாத்திரத்துள் இல்லை—ஆனால் சேர்க்கையின் காரணமாக பெருங்காய வாடை காங்கிரஸ் பாத்திரத்தில் இருக்கிறது! அப்பாத்திரத்தில் போடப்படும் பொருள் கொஞ்சம் கொஞ்சம் பெருங்காய வாசம் வீசுவதுபோல், காங்கிரஸ் கட்சியில் உள்ள சிலரிடை, முன்னாள் காங்கிரஸ் பண்பு பிரதிபலிக்கிறது!

அவர்கள், நல்லவர்களாகவும் இருக்கலாம்—அல்லவர்களாகவும் இருக்கலாம். காங்கிரஸ் கட்சியில் ஏற்பட்டுள்ள பணி மாற்றம், அப்பணிபுரிய முற்படுகிறவர்களிடமும், கணிசமான மாற்றத்தை உண்டாக்கி வருகிறது!

பணி மாறினால் அல்லாது, பணியாளர்களின்பண்பு மாறப் போவது கிடையாது! முயற்சிப்பது வீண் வேலை!

அன்னம் கிடைக்காத இடத்தில், ஒருவன் உண்ணா நோன்பு இருந்தான் ஆக வேண்டும்! ஏதோ கொள்கை வெற்றிக்காக உண்ணாநோன்பு இருக்கிறேன் என அவன் கூறினாலும், அதில் உண்மை இருக்க முடியாது—அக்கூற்றை எவரும் நம்பவும் செய்யார்! சோறு குன்றெனக் குவிந்திருக்கின்ற நிலையில், எவனாவது ஒருவன் கொள்கை வெற்றிக்காக உண்ண மறுத்தால், அவன்செயல் பிறரால் பாராட்டப்படுவதில் நியாயமும், அவன் சொலில் உண்மையும் இருப்பதாக எவரும் ஒப்புக் கொள்வர்!

அதிகாரம் இல்லாத காலத்தில், 'சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம்' பேசினவர்கள், அதிகாரத்தைக் கைப்பற்றியவுடன், 'அடிமை, உயர்வுதாழ்வு, பகை' எனச் செயலாற்றக் கிளம்பி இருப்பதை, இன்றைய காங்கிரஸ் கட்சியில் நாம் மட்டுமல்லாது காங்கிரஸ் கட்சியினர் ஒவ்வொருவரும் கண்டு வருகின்றனர்! இது அவலட்சணம்—ஆனால் உண்மை!!

# "சொர்க்க வாசல்" படத்தால் சைவம் சிதறுகிறதாம்!

## 'சுவர்க்கம் எங்கே?' என மக்கள் கேட்கின்றனராம்!

### விடைகூறமுடியாமல் சைவக்குஞ்சுகள் விழிக்கின்றனவாம்!

## 'அருமறையானந்தர்' ஓலம்!

"திராவிட முன்னேற்றக் கழகம் சினிமா, பிரசங்கம், பத்திரிகை வாயிலாக, தன்மார்க்கப் போதனையைப் பரப்பி, தூய மனம் படைத்த இளைஞர்களை தீய சக்தியில் தூண்டி விடுகிறது."

"திரு அண்ணாத்துரை எழுதிய சொர்க்கவாசல் படத்தில் சைவ சமயம் கேவலப்படுத்தப்படுகிறது. கடவுள் வழிபாடு நிந்தனை செய்யப்படுகிறது"

இவ்வாறு சைவ சமயப் பாதுகாப்பு கழகத்தின் தலைவர் அருமறையானந்தம் என்பவர் வெளியிட்டுள்ள கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறார்.

அவர் மேலும் குறிப்பிடுவதாவது:—

"ஆஸ்திகர்களுக்கு எதிராக இளைஞர்களை தூண்டிவிடுகிறார்கள். இதனால், திருச்சி, தஞ்சாவூர், மதுரை ஜில்லாக்களில் பல இடங்களில் மத நம்பிக்கை கடவுள் பக்தியுடைய ஆஸ்திகர்களை, சொர்க்க வாசல் படத்தில் வரும் வசனங்களை—பாட்டுகளைப் பாடியும் கைபாண்டி செய்து வருகிறார்கள். பிராமணர்களைப் பார்த்து, 'சொர்க்கம் எங்கே'' என்று கேலி செய்கிறார்கள்.

"இந்த அசம்பாவித நிகழ்ச்சிகள் நடக்காமல் இருப்பதற்கு படத்தை தடை செய்யும்படி சர்க்காரைப் பலமுறை கேட்டுக் கொண்டும் இதுவரை ஒன்றும் செய்யவில்லை; அதற்காக வருத்தப்படுகிறோம்."

"தெய்வ நம்பிக்கை அழியாமல் மதப்பற்று உடையவர்கள் பாதுகாப்போடு இருப்பதற்கும் சர்க்கார் உடனடியாக நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறோம். சமயப் பெரியோர்களும் பொதுமக்களும் சர்க்காரை வற்புறுத்த வேண்டும்.

—'பா. தே.' 19—7—54

## கிராமப் பஞ்சாயத்துகள்

அகில இந்தியக் காங்கிரசின் செயற்குழு நியமித்த கிராமப்பஞ்சாயத்துக்குழுவின் அறிக்கை முடிவடைந்து, கையெழுத்தும் ஆகிவிட்டதாகத் தெரிகிறது.

நாட்டில் இயங்கிவரும் பஞ்சாயத்துகள் பற்றிய முழு விவரமும், அறிக்கையில் இடம் பெற்றுள்ளதாம்.

பஞ்சாயத்து நிர்வாகம் ஜனநாயக ரீதியாக, திறமையுடன் நடைபெற சிபார்சுகளும், கிராம பஞ்சாயத்துகளின் நீதி நிர்வாக அமைப்புகள், கூட்டுறவு இயக்கத்துடன் கொள்ளவேண்டிய உறவு, வருமானத்திற்கான வழிகள், அரசியல் ஜனநாயகத்தில் இந்தப் பஞ்சாயத்துகளின் பங்கு முதலியனவும், அந்த அறிக்கையில் இடம் பெற்றுள்ளனவாம்.

காங்கிரசின் இந்த கிராமப் பஞ்சாயத்துக் குழுவில், டாக்டர் கே. என். கட்ஜு, ஜகஜீவன்ராம், குல்ஜாரிலால் நந்தா, கே. டி. மாளவியா ஆகியோர் அங்கம் வகித்து அறிக்கையைத் தயாரித்திருக்கின்றனர்.

## வெளியேற்ற உத்தரவுகள் அனுப்பப்படுகின்றன

### இலங்கையிலிருந்து வெளியேற மூன்று மாதத் தவணை

பாஸ்போர்ட்களை சர்க்காரே வைத்துக் கொள்கிறது

கொழும்பு, ஜூலை 18—இலங்கை சர்க்காருக்கும் இந்தியத் தூதர் தேசாய்க்கும் இடையே சென்ற வெள்ளிக்கிழமையன்று ஏற்பட்ட ஒப்பந்தப்படி 25,000 இலங்கை இந்தியர்கள் வெளியேற்றப்பட இருக்கிறார்கள்.

இதனை ஒட்டி இலங்கைக் குடியேற்ற இலாகா அதிகாரி ஜே. டி. ஜெயமனே தற்காலிக வாச பர்மிட்கள் காலாவதியான இந்தியர்களுக்கு 3 மாத அவகாசத்துடன் வெளியேற்ற உத்தரவுகளை அனுப்பத் துவங்கிவிட்டார் என்று தெரிகிறது.

குடியேற்ற அதிகாரியிடமிருந்து கிடைத்த வெளியேற்ற உத்தரவில் சம்பந்தப்பட்ட நபர்களின் பாஸ்போர்ட்கள் இலங்கை சர்க்கார் இலாகாவிடம் உள்ள தென்றும், அவர்கள் இலங்கைத் தீவைவிட்டு வெளியேறும்போது பாஸ்போர்ட்கள் திருப்பித் தரப்படும் என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

'நோட்டீஸ்' கிடைத்த மூன்று மாத காலத்திற்குள் அவர்கள் இலங்கையை விட்டு வெளியேறிவிட வேண்டுமென்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

ஏராளமான இந்தியர்களுக்கு வெளியேற்ற உத்தரவு 'நோட்டீஸ்' கிடைத்திருக்கிறதாம்.

# இலங்கை இந்தியர் துயரம்

## டாக்டர் லட்சுமணசாமி யோசனை

சென்னை, ஜூலை 18—

இலங்கை இந்தியர் பிரச்னையை, இரு நாடுகளும் தங்களின் நன்மையைக் கருதியும், ஒருவரை ஒருவர் நன்கு புரிந்து கொள்ளவும் ஒரு வழி தோன்றுவது சாத்தியமானதே என்று அண்மையில்; இலங்கை சென்று திரும்பிய டாக்டர் ஏ. லட்சுமணசாமி முதலியார் குறிப்பிட்டார்.

இலங்கை இந்தியர் பிரச்னை குறித்து மேலும் அவர் சொன்னதாவது:—

நீண்ட நாட்களாக இலங்கையில் வாழ்ந்து வரும் இந்தியரின் குறிப்பாக தென்னிந்தியரின் இன்றையத் துயரங்கள் மிகவும் வெளிப்படையானவை. அவர்களின் கோரிக்கைகளுக்கு இந்திய அரசாங்கத்தின் ஆதரவிருப்பதால், அவைகளை, இலங்கை அரசாங்கம் அனுதாபத்துடன் கவனிக்கும் என நம்புகிறேன்

"வெகு அண்மையிலிருக்கும் இலங்கை மக்களை தென்னாட்டவர் அன்னியர் என்றே கொள்வதில்லை. அவர்களுடன் நூற்றாண்டுக் காலமாக பண்பாட்டுத் தொடர்புடையவர்களுங்கூட. அவர்களுக்கு எத்தகு துன்பத்தையும் தர தென்னிந்தியர்கள் விரும்பவில்லை."

"வெகு விரைவில் அங்கிருந்து வெளியேறவிருக்கும் தனி நபர்கள் தங்களுக்கு அநீதி இழைக்கப்படுவதாக உணராதவகையில் அவர்களது துன்பங்களை நிவர்த்திக்க இலங்கை அரசு முன்வர வேண்டும். இதற்காக இலங்கை இந்தியர் பிரச்னையை மீண்டும் புனராலோசனை செய்ய வேண்டும்."

# புதுவையில் பிரான்சை ஆதரிக்கும் கட்சியின் மன மாற்றம்

## கூ தம்பி — இணைப்பு இயக்கத்தில் சேருகிறார்

கடலூர், ஜூலை 18—

பிரெஞ்சிந்திய சர்க்காரை விட்டு, கூ தம்பி தலைமையில் உள்ள ஜனநாயகக் கட்சியும் பிரெஞ்சிந்திய பகுதிகள் இந்திய யூனியனுடன் சேர்வதுதான் நேர்மை என்று முடிவு செய்திருப்பதாகத் தெரிகிறது

இந்த முடிவுடன் பிரெஞ்சு சர்க்காருக்கு இருக்கும் கடைசி ஆதரவும் போய்விட்டது என்று சொல்லலாம்

கூ தம்பியின் ஜனநாயகக் கட்சியின் நிர்வாகக் குழு உறுப்பினர்கள், கவர்னர் மேனுவேலைச் சந்தித்து, பிரெஞ்சிந்திய சர்க்கார் அடியோடு தோற்றுவிட்டதால், இணைப்பை ஆதரிக்க தங்கள் கட்சி முடிவு செய்துவிட்டதாக அவரிடம் தெரிவிப்பார்கள் என்று தெரிகிறது.

இக்கட்சி, நான்கு மாதங்களுக்கு முன் 150 பேர்களுடன் பிரெஞ்சு சர்க்காரால் ஆரம்பிக்கப்பட்டது.

## மாஹியில் நிர்வாகக் குழு அமைக்கப்பட்டது

### அரசியல் கைதிகளுக்கு மன்னிப்பு

தலைச்சேரி, ஜூலை 18—

மாஹி நிர்வாகத்தை நடத்த, 15 பேர் கொண்ட குழு ஒன்றை மாஹி நிர்வாகியாக ஜூலை 16-ம் தேதியன்று பதவி ஏற்ற விடுதலை இயக்கத் தலைவர் குமாரன் நியமித்திருக்கிறார். இக்குழுவிற்கு குமாரன் தலைவராக இருப்பார் என்று தெரிகிறது.

மாஹி விடுதலையை ஒட்டி, எல்லா அரசியல் கைதிகளுக்கும் மன்னிப்பளித்தும், அரசியல் குற்றத்திற்காகப் பறிமுதல் செய்யப்பட்ட சொத்துக்களைத் திருப்பித் தருமாறு உத்திரவிடப்பட்டிருக்கிறது.

## குடி உரிமை

ஜம்மு, காஷ்மீர் இராஜ்யங்களில் உள்ள ஒரு இலட்சம் பக்துனியர்கள் இந்தியக் குடிமக்களாக தங்களைப் பதிவு செய்து கொண்டனர். இவர்களுக்கு காஷ்மீர் முதல் அமைச்சர் பக்ஷி குலாம் முகமது தனது பாராட்டுதலைத் தெரிவித்துள்ளார்.

## அருப்புக்கோட்டை நகராட்சி உப - தேர்தல்

### காங்கிரஸ்— கம்யூனிஸ்டுகளுக்கு தோல்வி

அருப்புக்கோட்டை, ஜூலை 16—

இக்கர் நகராட்சி மன்ற முன்னாள் உறுப்பினர் ஏ. சுப்பையா என்பவர் வீட்டு வரி செலுத்தாததால் ஏற்பட்ட 16-வது வார்டு (தனித் தொகுதி) காலி ஸ்தானத்திற்கு 9-7-54ல் தேர்தல் நடந்து இன்று வாக்குச் சீட்டுகள் எண்ணப்பட்டன.

இதில், நகராட்சி முற்போக்கு கூட்டணியின் சார்பில தோழர் ஏ. வெள்ளையனும் (தி. மு. க. அனுதாபி), தாழ்த்தப்பட்டவர் சம்மேளனத்தின் சார்பில் தோழர் வி. கே. மலைச்சாமியும், கம்யூனிஸ்டு—காங்கிரஸ் ஆதரவில் தோழர் ஏ. சுப்பையனும் போட்டியிட்டனர். மொத்தம் பதிவான ஓட்டுகளில் கழிவு நீக்கியது போக 861-ல், தோழர் வெள்ளையனுக்கு 427-ம் தோழர் மலைச்சாமிக்கு 209-ம், தோழர் சுப்பையனுக்கு 225-ம் கிடைத்து, பெருவாரியான ஓட்டுக்களால் தோழர் வெள்ளையன் வெற்றி பெற்றார்.

இதில் குறிப்பிடத் தக்கது என்னவென்றால்:—தோழர் சுப்பையனுக்கு ஆதரவாக காங்கிரஸ், கம்யூனிஸ்டு, பிரஜா சோஷலிஸ்டு ஆகிய கட்சியைச் சேர்ந்தவர்களும், பணமுட்டைகளும் ஒரே அணிவகுப்பில் நின்று வேலை செய்தனர். தோழர் வெள்ளையனுக்கு தி. மு. கழக உறுப்பினர்கள் வேலை செய்தனர். வெற்றி தி. மு. கழகத்திற்கே கிடைத்தது.

## இமாலய இளவரசி

பம்பாய், சென்னை, சிங்கப்பூர் செல்லும் ஏர் இந்தியா இன்டர்நேஷனல் விமானமான இமாலய இளவரசி தனது முதல் பிரயாணத்தை முடித்துக் கொண்டது என்று தெரிகிறது.

## பாதிரிமார் எதிர்ப்பு

அந்நியப் பாதிரிமார்களின் நடவடிக்கைகளுக்கு ஒரு முடிவுகட்ட அனைவரும் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்வதாக அகில இந்திய இந்துமகா சபை காரியக் கமிட்டி தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியிருக்கிறது.

# மும்முனைப் போர் முழக்க நாள்!

★

தி. மு. கழகத் தலைமை நிலைய அறிக்கையின்படி ஜூலை 15-ல், திராவிடமெங்கும் 'மும்முனைப் போர் முழக்க நாள் விழா வெகு சிறப்பாக நடைபெற்றுள்ளது. சிற்றூர்களிலும் பேரூர்களிலும் கொடியேற்று விழாவும் ஊர்வலமும் பொதுக் கூட்டமும் விமரிசையாக நடைபெற்றுள்ளன. கூட்டங்களில் தூத்துக்குடி, கல்லக்குடி வழக்குகளை வாபஸ் வாங்கக் கோரியும், துப்பாக்கிப் பிரயோகத்தால் இறந்தவர்களின் குடும்பத்தினருக்கு நஷ்ட ஈடு தரக் கோரியும் தீர்மானங்கள் நிறைவேறி இருக்கின்றன.

மும்முனைப் போராட்டத்தில் பங்கு பெற்று வெற்றி தேடித்தந்த வீரர்களுக்கு வாழ்த்தும், போர்க் களத்தில் அடக்குமுறைக்கும் பலியான வீரத் தியாகிகளுக்கு வணக்கமும் செலுத்தியுள்ளது திராவிடம்—பெருமையுடன். அன்றைய நிகழ்ச்சிகளின் சுருக்கம் கீழே தரப்பட்டுள்ளது:—

### சென்னை (50வது வட்டம்)

15—7—54ல் சென்னை 50-வது வட்ட தி. மு. கழகச் சார்பில் கழக அலுவலகத்தில் தோழர் செமோறன் தலைமையில் மும்முனை போராட்ட வெற்றிவிழா கூட்டம் கூடியது. செயலாளர் திருநாதன் கொடியேற்றி வைத்தார். தோழர்கள் தெ. பாண்டியன், பொ. இரத்தினவேலு, க. இளம்பிறையன், வி. கோவிந்தசாமி முதலியவர்கள் போராட்டத்தைப் பற்றியும், அதன் நன்மையைப் பற்றியும் விளக்கி பேசினர்.

★

### சௌந்தரபாண்டியனார் நினைவுப் படிப்பகம்

16—7—54 அன்று மாலை 7 மணியளவில் படிப்பக அலுவலகத்தில் (ஜூலை கிளை) தி. மு. கழகச் செயலாளர் மு. கன்னியப்பன் தலைமையில் பல தோழர்கள் மும்முனை போராட்டம் பற்றி சொற்பொழிவாற்றினார்கள் படிப்பகச் செயலாளர் நன்றி கூற கூட்டம் முடிவுற்றது.

★

### தியாகராயர் பகுத்தறிவு மன்றம்

சென்னை, ஜூலை, 15—

இன்று காலை வட சென்னை தியாகராயர் பகுத்தறிவு மன்ற கட்டிடத்தில், மும்முனைப் போராட்டத்தின் முழக்க நாள் விழாவினை ஒட்டி தோழர் டி. செல்வராசன் கொடி ஏற்றிவைத்தார்.

★

### திருத்துறைப்பூண்டி

15—7—54 மாலை ஊர் பொது இடத்தில் கழகக் கொடி ஏற்றப்பட்டது கூடியிருந்தோருக்கு 'ஏன் ஜூலை 15 கொண்டாடுகிறோம்' என்பதைப் பற்றியும் நமது போராட்டங்களை விளக்கியும் கூறப்பட்டதுடன் சிற்றுண்டியும் வழங்கப்பட்டது.

★

### குன்றத்தூர்

15—7—54 மாலை 6-30 மணிக்கு பெரியத தெருவில், "மும்முனைப் போராட்ட முழக்க விழா" தோழர் டி. எம். கணபதி தலைமையில் நடைபெற்றது தோழர் என். சம்பந்தம் பேசினார். செயலாளர் நன்றி கூற கூட்டம் முடிவுற்றது.

★

### ஓட்சல்பட்டி

15—7—54 தி. மு. கழக தோழர்கள் மாலை 6-30 மணிக்கு வாத்திய கோஷ்டி குழு, புது கொடிகள் பறக்கவிட்டு ஊர்வலம் வந்தனர். கடத்தூர் ரா. அருணசலம் அவர்கள் தலைமையில் பொதுக் கூட்டம் நடைபெற்றது. செயலாளர் டி. நாகப்பன் அவர்கள் "மும்முனை போராட்டம்" என்பது பற்றி விரிவாகப் பேசினார். ரயில் நிறுத்த போராட்டத்தில் கலந்து சிறை சென்ற தி. மு. கழக தோழர்களுக்கு, தோழர் ஆர். கொண்டப்பன் மலர்மாலை சூட்டி வாழ்த்து கூறினார். செயலாளர் நன்றி கூறி, சிற்றுண்டிகள் வழங்கப்பட்டது.

### நாகை

15—7—54 வியாழனன்று இரவு 7 மணிக்கு நாகை தி. மு. கழகக் கட்டிடத்தில், தோழர் பாண்டியன் தலைமையில் மும்முனைப் போராட்ட முழக்க நாள் விழா சிறப்புற நடந்தேறியது தலைவர் முன்னுரையில் தி. மு. கழகத்தின் மும்முனைப் போர் பற்றி விளக்கவுரை ஆற்றினர்.

திருச்செங்கோடு பெ. சதாசிவம், ஜோசப்; கல்யாணம் ஆகியோர் மும்முனைப் போராட்டத்தின் வரலாறு பற்றியும், போராட்டத்தில் பெற்ற வெற்றியைப் பற்றியும் பேசினர்.

அடுத்துத் தோழர் என். வி. நடராசன் அவர்கள் கழகத் தோழர்களுக்கு அறிவுரை கூறினார்.

அவர் பேசுகையில் "எதிர்பாராத வகையில் நாகை தி. மு. கழகத் தோழர்கள் கழக மாளிகையில் நடத்தும்—கொண்டாடும் இந்த விழாவில் பேச, கலந்துகொள்ள வாய்ப்பளித்தமைக்கு என் இதயங்கனிந்த நன்றி. தி. மு. க.-வின் மும்முனைப் போராட்டம் பற்றியும் இவ்வெற்றி விழா பற்றியும் நண்பர்கள் விரிவாக விளக்கவுரையாற்றினார்கள், அவர்களின் விளக்கவுரையைக் காட்டிலும் விளக்கமாக உங்கள் அனைவருக்கும் இதுபற்றி நன்கு தெரியும். எனவே, நான் இதுபற்றி என் சொந்த முறையில் தோழர்களுக்கு சில கருத்துக்களை கூறுகிறேன். உள்ளூரைப் பொறுத்தவரையில், கழகத் தோழர்கள் பொதுப் பிரச்சினைகளில் கட்சி வேற்றுமையின்றி, மக்களுக்கு பயன்—பலன் தரும் செயல்களில் ஈடுபடுங்கள்; நண்பர்கள் கூறினார்கள், நாகை மின்சார கம்பெனியாரின் நடத்தைப் பற்றியும், அதற்கு சர்வ கட்சிகளும், நகராட்சி மன்றங்களும் ஒன்றுகூடி, மின்சாரக் கம்பெனியாரின் அதிகக் கட்டணத்தைக் குறைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளதாக இதுபோன்றஉள்ளூர் பிரச்னைகளில், மக்களுக்கு நலன் பயக்கும் செயல்களில் ஈடுபடும் கேட்டுகொண்டு, இவ்வாய்ப்பினை அளித்த நாகை தி. மு. கழகத் தோழர்களுக்கு மீண்டும் என் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கழகக் கட்டிடம் மின்சார விளக்குகளாலும், கொடிகளாலும், தோரணங்களாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தது. தோழர்களின் இல்லங்களிலும், பொது இடங்களிலும், வீதிகளிலும், நகரின் பல பாகங்களிலும், கொடிகள் ஏற்றிவைத்து வெற்றி விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

★

### கல்லக்குடி

15—7—54 மாலை 6 மணிக்கு கழகச் செயலாளர் அ. தம்புசாமி தலைமையில் போராட்ட விழா பொதுக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் அதியமான், செங்குட்டுவன் ஆகியோர் பேசினர். தலைவர் போராட்டங்களின் அடிப்படை கருத்துக்களையும் சாதனைகளையும் விளக்கிக் கூறினார்.

### நாமக்கல் (சேலம்)

15—7—54 வியாழக்கிழமை மும்முனைப் போராட்ட வெற்றி விழா வெகுவிமரிசையாக கொண்டாடப்பட்டது. காலை 9 மணியளவுக்கு செல்லப்பம்பட்டி ஊராண்மைக் கழகத் தலைவரும் தி. மு கழக செயற்குழு உறுப்பினருமான தோழர் சி. காத்தமுத்து அவர்களால் கழகக் கட்டிடத்தில் கொடி ஏற்றிவைக்கப்பட்டது. மாலை 5 மணிக்கு கழகக் கட்டிடத்திலிருந்து காத்தமுத்து தலைமையில் பெரியதோர் ஊர்வலம் ஒன்று புறப்பட்டு முக்கிய வீதிகளின் வழியாகச் சென்று 6-30 மணிக்கு கழகக் கட்டிடத்தை அடைந்தது. பின்னர் தோழர் பி. கந்தசாமி அவர்கள் தலைமையில் கழகக் கட்டிடத்தின் முன் பொதுக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் என். முத்துகிருட்டிணன், செ. ம. அங்கமுத்து, க. இளங்கோ ஆகியோர் பேசினர். சிறுவர்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டு செயலாளர் அங்கமுத்துவால் நன்றி கூறப்பட்டது.

★

### லால்பேட்டை

15—7—54 வியாழன் இரவு எட்டு மணிக்கு கடை வீதியிலுள்ள கழக கட்டிடத்தில் தோழர் வே. சின்னத்தம்பி தலைமையில் போராட்ட வெற்றி விழாவும், மஜீத் படிப்பக அமைப்பு விழாவும் நடைபெற்றது. தோழர்கள் வே. கோவிந்தராசு, மு. இராமசாமி ஆகியோர் விரிவுரை யாற்றினார்கள்.

★

### கடம்பத்தூர்

15—7—54 கடம்பத்தூர் தி. மு. கழக கட்டிடத்தில் மும்முனை போராட்ட வெற்றி விழாவை யொட்டி காலை 6. மணிக்கு கொடி ஏற்றப்பட்டது. இரவு தி. மு. கழக கட்டிடத்தில் 8 மணி அளவில் க. கு. நடராசன் தலைமையில் க. கோவிந்தராசன்; க. செல்வராசன், க. புகழரசன் ஆகியோர் பேசினர். செயலாளர் நன்றிகூற கூட்டம் முடிவுற்றது.

★

### அய்வநல்லூர்

15—7—54 காலை 9 மணிக்கு கழகத் தோழர்களால் பல முக்கிய இடங்களில் கொடிகள் ஏற்றி வைக்கப்பட்டு மும்முனை போராட்ட முழக்க நாள் கொண்டாடப்பட்டது.

★

### கீழப்பாலூர்

கீழப்பாலூர் தி. மு. கழக சார்பில் ஜூலை 15 வெற்றி நாள் கொண்டாடப்பட்டது. நகரின் பல பகுதிகளிலும் கொடியேற்றப்பட்டது. ஜூலை 15 பற்றி அரு. இராமசாமி, வே. சிவபெருமாள், எஸ். பி. சாமி, எஸ். இலக்குமணன் ஆகியோர் பேசினர்.

★

### சின்னாளப்பட்டி

ஜூலை 15-ல் "மும்முனைப் போராட்ட முழக்க நாள்," கொண்டாடப்பட்டது. கழகத் தோழர்கள் ஊர்வலமாகச் சென்று தெருக்களின் முக்கிய இடங்களில் கழகக் கொடி ஏற்றப்பட்டு, செயலாளர் நன்றி கூற ஊர்வலம் முடிக்கப்பட்டது.

★

### மதுரை

15—7—54ல் மதுரை நகர் பாண்டிய வேளாளர் தெருவிலிருக்கும் இளங்கோ மன்றத்தில் காலை 9 மணிக்கு தோழர் மு. சந்தானம் அவர்களால் கொடியேற்றப்பட்டு விழா கொண்டாடப்பட்டது.

# தூத்துக்குடி சதிவழக்கு நிதி அளிப்புப் பொதுக்கூட்டம்

காஞ்சீபுரம், ஜூலை 18—

காஞ்சி கண்ணன் தியேட்டர் திடலில் இன்று செங்கற்பட்டு மாவட்ட தி. மு. கழக சார்பில் தூத்துக்குடி நிதி அளிப்புப் பொதுக்கூட்டம் ஒன்று நடைபெற்றது.

தலைமை வகித்த தோழர் சி. வி. எம். அண்ணாமலை அவர்கள், ரு 1957—12—1 கொண்ட பண முடிப்பை பொதுச் செயலாளர் அண்ணாதுரை அவர்களிடம் தந்தார்.

துவக்கத்தில் தோழர்கள் தாமஸ், முருகேசன் ஆகியோர் கழகப் பண் இசைத்தனர்.

தலைவர் முன்னுரைக்குப் பின், தோழர்கள் அ. பொன்னம்பலனார், தெய்வசிகாமணி எம். எல். ஏ., காஞ்சி-கல்யாண சுந்தரம், சி. வி. ராஜகோபால் ஆகியவர்கள் "திராவிட நாடு திராவிடருக்கே" ஏற்படும் வரை நம் போராட்டங்கள் தொடர்ந்து நடைபெற்று வரும் என்றும், நடைபெற்ற மும்முனைப் போராட்டங்களில் நாம் அடைந்த வெற்றிகளையும், அரசியலாரின் அடக்குமுறைக் கொடுமைகளையும், பல்லாயிரவர் சிறைபட்டும் பலர் உயிர் துறந்தும் ரத்தம் சிந்தியும் உறுதி குன்றாமல்—கொள்கை நெறியில் தளராமல்—பணியாற்றி வந்தவர்களுக்கெல்லாம் பாராட்டுதலும் நன்றியும் கூறிக்கொண்டார்கள்.

சித்தூர், நாஞ்சில் நாடு, புதுவைப் பிரெஞ்சுப் பகுதிகளில் வாழும் தமிழ் மக்களின் எழுச்சி பற்றியும், இலங்கையிலிருந்து பல்லாயிரக்கணக்கான மக்களை வெளியேற்றும் திட்டம் பற்றியும் விரிவுரையாற்றினார்கள்.

காற்றும், மழையும் அற்றுப் இருந்தும் மக்கள் பல்லாயிரக் கணக்கில் திரண்டிருந்தனர்.

இறுதியாகப் பொதுச் செயலாளர் அண்ணாதுரை அவர்கள் பேசினார். அவர் பேச்சினில் குறிப்பிட்டதாவது:—

"செங்கற்பட்டு மாவட்டச் சார்பில் அளித்த தூத்துக்குடி சதி வழக்குக்காக நிதி தந்து உதவிய மக்கட்கு நன்றியைக் கூறிக்கொள்கிறேன். அரசியலார் அடக்குமுறையுடன் சதி வழக்குகளும், நம் கழகத்தின்மீது தொடர்ந்தார்கள். தூத்துக்குடியில் 93 நம் தோழர்கள் சிறையில் 11 மாதங்கட்கு மேல் அடைபட்டுக் கிடந்தார்கள். ஜாமீனில் விடவும் மறுத்தார்கள். பெரும் குற்றங்களைச் சுமத்தி பழி வாங்கவும், மாசு கற்பிக்கவும், அரசாங்கம் அணிவகுத்துக் கொண்டது. நாம் நீதி பெற, மாசு துடைக்க மக்கள் சார்பில் நிதி சேர்த்து, நீதி மன்றத்தில் வழக்காடிக் கொண்டிருக்கிறோம். வழக்கு முடிவு பெறவில்லை. வழக்கின் விசாரணை ஆரம்பமாகப் போகிறது. துன்பங்களை யெல்லாம் துணிவுடன் ஏற்ற, தியாக உணர்வு கொண்ட தோழர்களை எல்லாம் பாராட்டுகின்றேன். நாம் சமூக அரசியல் பொருளாதார அடிப்படையில் மக்கள் வாழ்க்கையில் முன்னேற்றங்கருதி பல திட்டங்களை வகுத்துக்கொண்டிருக்கிறோம். அடக்குமுறைக்கும், சிறைவாசத்திற்கும் நம் கழகத் தோழர்கள் அஞ்சியது கிடையாது. ஆச்சாரியார் ஆட்சியில் பல்லாயிரவர் சிறைப்பட்டோம். புதிய கல்வித் திட்டத்தை எதிர்த்தோம். இறுதியில் வெற்றி கண்டோம். கல்லக்குடி என்ற பெயர் கொண்ட டால்மியாபுரம் என்ற வடநாட்டு ஆதிக்க வெறி கொண்ட ரயில்வே நிலையப் போர்டு மேல் நம் தோழர்கள் ஒட்டினார்கள். ஒட்டியது அப்படியேதானிருக்கிறது. வடநாட்டு டில்லி சர்க்கார் அதைக் கிழித்தார்களா? நம் மாகாண சர்க்கார்தான் கிழித்தார்களா? கிழிக்கவில்லையே? '1953-ம் ஜூலை 15-ல், நம் நாட்டில் ஓடும் ரயில்கள் எல்லாம், பகல் நேரத்தில் நிறுத்தப்பட வேண்டும். உயிர்ச் சேதம், பொருட் சேதம் இன்றி பகல் நேரத்தில் மட்டும்' என்று திட்டமாகக் கூறினேன். ரயில்கள் நின்றன. 6 உயிர்கள் துப்பாக்கியால் சுட்டுக் கொல்லப்பட்டு மாண்டும், திராவிட முன்னேற்றக் கழகத்தார்கள் கண்ணியம், கட்டுப்பாடு குலையாமல் நடந்துகொண்டார்கள்.

பண்டிதர் நேரு அவர்கள் பொறுப்பற்ற முறையில் தம் தகுதியை உணராமல், பதட்டமாகப் பேசியதை உணரும்படி செய்ய வேண்டுமென்று விரும்பினேன். டில்லி பிரதமர் பண்டிதர் நேரு தம் தவறை புணர்ந்தாரா என்பது நம் கவலையல்ல? ஆனால் நேருவின் போக்கையும், அதை எதிர்க்க நம் கழகத்தின் போராட்டத்தையும் உலக மக்கள் அறியும்படி நேர்ந்தது இத்தகைய போராட்டங்கள் நிகழ்ந்த நிலைகளை நினைவுபடுத்திக் கொண்டு, மேலும் நாம் ஊக்கம் பெற இதுபோன்ற நினைவு நாள் கொண்டாடுவது ஒரு சில பொறுமைக்காரர்கட்குப் பிடிக்காமலிருக்கலாம்; வெறுப்பாகக் கூட இருக்கலாம். ஆனால், முருகக்கடவுள் சூரசம்ஹாரம் செய்த நாளைக் கூறும் புராணக் கதை வரலாற்றை வருடம் தவறாமல் திருவிழாக் கொண்டாடுகின்றார்கள். இது, ஏன்? சிந்தித்தார்களா? இது குற்றமில்லை என்றால் நாம் செய்வது மட்டும் எப்படி குற்றமாகும்?

சித்தூர் போராட்டம், நாஞ்சில் நாட்டில் நடைபெறும் தமிழ் மக்கள் போராட்டம், பிரெஞ்சிந்தியாவில் நடைபெற்று வரும் விடுதலைக் கிளர்ச்சி, கொழும்புவில் நம் மக்கள் நடத்தப்பட்டு வரும் கொடுமை நிலைமை பற்றியும் விளக்கிப் பேசினார்கள். மற்றும் கட்சித் தோழர்கள் கேட்ட கேள்விகட்கும் தக்க பதில் கூறினார்கள். தலைவர் முடிவுரையுடன் இரவு 9-30 மணிக்குக் கூட்டம் இனிது முடிவுற்றது.

(சொற்பொழிவில் குறிப்பிட்ட சில முக்கிய பகுதி பிறகு வெளிவரும்.)

---

## கழகக் கூட்டம்

★

**திருவெண்காடு**

கீழ வீதியில்

21—7—54 மாலை 5½ மணிக்கு

தலைவர்: டி. வி. சம்பத்

பேசுவோர்:

என். வி. நடராசன்

என். சிட்டப்பா

---

ஹங்கேரியின் இரண்டாவது தொழில் நகரமான கயர் என்னும் நகரம், டான்யூப் நதியில் ஏற்பட்ட வெள்ளத்தால் பாதிக்கப்பட்டிருக்கிறதாம்.

---

# உலக அரங்கில்

**வெனீஸ்:**

வெனிசில் நடைபெற்ற உலக டாகுமெண்டரி பட விழாவிலும், குழந்தைகள் பட விழாவிலும், ஆஸ்திரேலியா முதற் பரிசு பெற்றிருக்கிறது.

**ஜினீவா:**

சீனப் பிரதமர் சூ-என்-லாய் சார்லி சாப்ளினுக்கும் அவரது மனைவியாருக்கும் விருந்தளித்தார் என்று தெரிகிறது. சார்லி சாப்ளின் நடித்த படங்களை சூ-என்-லாய் மிகவும் விரும்புகிறார் என்று தெரிகிறது.

**லண்டன்:**

தொழிற் கட்சியின் முக்கிய தலைவர்களில் ஒருவரும், பிரிட்டிஷ் பாராளு மன்ற உறுப்பினருமான ராபர்ட் ஜான் டைலர், தனது 73-வது வயதில் மரணமடைந்தார் என்று தெரிகிறது.

**பாங்காக்:**

தாய்லாந்தில், சிறு காலத்திற்குள் வியாபாரிகளின் கலகம் ஒட்டி, சர்க்காரே வட்டிக் கடைகளை நடத்த இருக்கிறது.

**நியூயார்க்:**

கம்யூனிஸ்டு சீனாவை, ஐ. நா.-வில் சேர்ப்பது மிகவும் அக்கிரமமான செய்கை என்றும், அப்படி சீனா சேர்க்கப்பட்டால் அமெரிக்கா ஐ. நா. சபையிலிருந்து வெளியேறும் என்றும், ஐ. நா. சபையில் அமெரிக்கப் பிரதிநிதிகளின் தலைவரான ஹென்றி காபட் லாட்ஜ் கூறினார்.

**பாரிஸ்:**

பிரான்சின் 14-வது டிவிஷனைச் சேர்ந்த 1,500 துருப்புகள் டுனிஷியாவுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன. இத்துருப்புகள், டுனிஷிய பாதுகாப்பு ஏற்பாடுகளைக் கவனிப்பார்கள் என்று தெரிகிறது.

**காலிம்போங்:**

திபேத்தில் சாங்-சுங் என்னும் ஆற்றில், வெள்ளப் பெருக்கு ஏற்பட்டிருக்கிறதாம். லாஸாவில் உள்ள சீனத் துருப்புகள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட நகரமான கயான்ட்சி மக்களுக்கு உதவ சென்றிருக்கின்றனர்.

---

## சென்னை மாவட்ட தி. மு. கழக செயற்குழு உறுப்பினர்களுக்கு

'சென்னை மாவட்ட தி. மு. கழக செயற்குழுக் கூட்டம் 24—7—54 சனி மாலை 5 மணிக்கு, இராயபுரம் அறிவகத்தில் நடைபெறும். மாவட்டக் கழக வரவு செலவு பரிசீலனையும் இன்னும் இரு முக்கிய விஷயங்கள் குறித்தும் முடிவு செய்ய வேண்டியிருப்பதால், செயற்குழு உறுப்பினர்கள் அனைவரும் இதனையே அழைப்பாக ஏற்று, தவறாது வருகைதர வேண்டுகிறேன்' என, சென்னை மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் தோழர் கே. எம். கண்ணபிரான் அறிவிக்கிறார்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

# கலப்படமற்ற முழுப் பொய்!

## 'தினத் தந்தி' போக்கு பற்றி அண்ணாதுரை

### திருவாங்கூர் தமிழர் அறப்போரும்— திராவிட முன்னேற்றக் கழகமும்

உண்மை நிலைமை விளக்கம்

★

திருவாங்கூர் தமிழர்கள் நடத்தும் அறப்போர் குறித்து, எனக்கு எழுதி, ஆதரவு அளிக்கும்படி கேட்டுக் கொண்டதாகவும், அதற்கு நான், மலையாளியான பட்டம் தாணுப் பிள்ளையுடன் போராட வேண்டாம், டில்லியுடன் போராடுங்கள் என்று யோசனை கூறிக் கடிதம் அனுப்பியதாகவும், திருவாங்கூர் தமிழர் தலைவர் ஒருவர் கூறியதாக, 'தினத் தந்தி'யில் ஒரு செய்தி வெளிவந்திருக்கிறது. இது கலப்படமற்ற முழுப் பொய் என்பதை அனைவருக்கும் கூறிக்கொள்கிறேன். திருவாங்கூர் தமிழர்களின் அறப்போர் குறித்து எனக்கு ஒரு கடிதமும் வரவில்லை; நான், 'தினத் தந்தி'யில் வெளியிடப்பட்டது போன்ற கருத்தை வெளியிட்டதுமில்லை.

திருவிதாங்கூரில் தமிழர்கள் நடத்தும் அறப்போர் குறித்து, நாஞ்சில் மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகச் செயலாளர் தோழர் ஜான் அவர்கள், என்னிடம் எடுத்துக் கூறினார். பொட்டல்பேட்டை தி. மு. கழக மாநாட்டில், மேற்படி அறப்போரை ஆதரித்தும், அடக்குமுறையைக் கண்டித்தும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. நாஞ்சில் மாவட்ட தி. மு. கழகம் அறப்போரை ஆதரித்தும் வருகிறது;—உண்மை இது.

ஆனால், 'தினத் தந்தி'யில், முழுவதும் பொய்யான ஒரு செய்தி வெளிவந்திருக்கிறது. பொது மக்கள் ஏற்கெனவே, 'தினத் தந்தி'யின் போக்கை நன்றாக அறிந்திருக்கிறார்கள். எனவே, இப்படிப்பட்ட அபத்தச் செய்திகளைப் பொருட்படுத்தமாட்டார்கள் என்ற போதிலும், உண்மையை மக்கள் அறிவதற்காக இந்த விளக்கத்தை வெளியிட்டிருக்கிறேன்.

பொதுமக்களுக்கு இப்படிப் பொய்ச் செய்திகளைத் தந்து பொது வாழ்வுத் துறையையே இழுக்குடையதாக்கும் 'தினத் தந்தி'யின் போக்கைப் பொறுப்புணர்ந்தோர் அனைவரும் கண்டிப்பர் என்று நம்புகிறேன்.

அன்பன்,

அண்ணாதுரை

---

**திருவாங்கூர் தமிழர்களுக்கு அண்ணாதுரையின் யோசனை**

"மலையாளியான பட்டம் தாணுவை எதிர்த்தா போராடுவது? நேருவை எதிர்த்து போராடுங்கள்!"

தமிழர் காங்கிரசுக்கு அண்ணாதுரை கடிதம்

மதுரை, ஜூலை 18—

திருவாங்கூர் தமிழர்கள், மலையாளியான பட்டம் தாணுப் பிள்ளையை எதிர்த்து போராடாமல் நேருவை எதிர்த்து போராட வேண்டும் என்று திராவிடமுன்னேற்றகழக தலைவர் அண்ணாதுரை யோசனை கூறினார்.

திருவாங்கூர் தமிழர் பகுதியை தமிழ்நாட்டுடன் இணைப்பதற்காக அங்குள்ள தமிழர்கள் நடத்தும் போராட்டத்துக்கு ஆதரவு அளிக்கும்படி கேட்டு, தமிழ்நாட்டில் உள்ள எல்லா கட்சியினருக்கும் திருவாங்கூர் தமிழர் காங்கிரஸ் கடிதங்கள் அனுப்பியிருந்தார்கள்.

அநேகமாக எல்லா கட்சியினரும் ஆதரவு தெரிவித்து பதில் எழுதியிருப்பதாக திருவாங்கூர் தமிழர் காங்கிரஸ் தலைவர்களில் ஒருவரான பி. எஸ். மணி நேற்று மதுரையில் நமது நிருபருக்கு அளித்த பேட்டியின்போது கூறினார்.

நேருவுடன் போராட யோசனை

அண்ணாதுரை எழுதியுள்ள கடிதத்தில் "திருவாங்கூர் தமிழர்களே பட்டம் தாணுவை எதிர்த்து போராட வேண்டாம்! நேருவுடன் போராடுங்கள்! வெற்றி கிட்டும்" என்று சொல்லியிருப்பதாக மணி கூறினார்.

('தினத்தந்தி' பிரசுரித்த செய்தி)

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

## காமராசர் வெற்றி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பதாகத் தெரிகிறது.

குடியாத்தம் தொகுதியில், வாக்காளர்கள் இந்தத் தேர்தலை, ஒரு கட்சிப் பிரச்னையாகவே எடுத்துக் கொள்ளாமல், ஆச்சாரியார் கோஷ்டிக்கும், காமராஜர் கோஷ்டிக்கும் நடைபெறும் பலப் பரீட்சை என்றே கருதி, அந்த எண்ணத்துடனேயே வேலையும் செய்து வருகிறார்கள்.

அதனாலேயே, காங்கிரஸ் கட்சியின் போக்கும் நோக்கும் பிடிக்காதவர்களெல்லாம்கூட, கிராமம் கிராமமாகச் சென்று காமராஜருக்கு ஆதரவு திரட்டி வருகிறார்கள்.

பதவி இழந்த ஆச்சாரியார் பல்லைப் பிடித்துப் பார்க்கிறார்!

கொல்லைப்புறம் வந்தவர் காமராஜரைக் காலை வாரிவிடப் பார்க்கிறார்!

என்பன போன்ற வாசகங்கள், குடியாத்தம் தொகுதியில் வெகுவாகப் பேசிக் கொள்ளப்படுகின்றன.

இரண்டாண்டுக் கால ஆச்சாரியார் ஆட்சியிலே அவதிப்பட்டோரின் அணிவகுப்பு திரண்டெழுந்து காமராஜர் பக்கம் நிற்கிறது. காமராஜரின் வெற்றி காங்கிரசின் வெற்றி என்று கூறிக்கொள்ளப்படுமானாலும், சூட்சமம் தெரிந்தவர்கள், காமராஜர் வெற்றி—ஆச்சாரியாரின் தோல்வியாகும் என்றே உறுதியாக நம்புகிறார்கள்.

---

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. செழியன், எம். ஏ., அவர்களால், அழகிரி அச்சகத்தில் அச்சிட்டு [illegible] வெளியிடப்பட்டது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம். ஏ.